# டெக்னோதேர்ஷ்ட் தேசிய அளவில் மாணவர்களுக்கான தொழில்நுட்ப கருத்தரங்கம்

மயிலாடுதுறை,அக்.12-

தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கான டெக்னோதேர்ஷ்ட் 25-26 (*TecknothirsT*), 8,9,10 அக்டோபர் 2025 அன்று A.V.C. பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. *Dr. P.Ragupathy, Senior Principal Scentist, CECRI – i* கருத்தரங்கு கட்டுரையை வெளியிட்டார். அதனை கல்லூரியின் இயக்குனர் முனைவர்.. செந்தில்முருகன் மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர். பாலசுப்ரமணியன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் செல்வமுத்துகுமரன் விழாவிற்க்கு தலைமை வகித்தார்.



இந்த நிகழ்வு தகவல் தொழில்நுட்பத் துறை, கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை, செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை, மின்னணு மற்றும் தொடர்பியல் பொறியியல் துறை, மின் மற்றும் மின்னணுப் பொறியியல், கருவியியல் மற்றும் கட்டுப்பாட்டு பொறியியல் துறை, இயந்திர பொறியியல் துறை, சிவில் (கட்டிட) பொறியியல் துறை, முதுகலைக் கணினிப் பயன்பாடியல் துறை, முதுகலை வணிக மேலாண்மை துறை, அறிவியல் மற்றும் மனிதநேயப் பாடத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைத்து மிக விமர்சையாக நடைபெற்றது.

பொறியியல் நிறுவனங்களின் மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பத் திறமையையும் நிஜ உலக சவால்களுக்கு தங்களது புதுமையான தீர்வுகளையும் வெளிப்படுத்த இந்த கருத்தரங்கு புதிய தளத்தை வழங்கியது. படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப சிறப்பை ஊக்குவிக்கும் தொலைநோக்குடன், பேப்பர் ப்ரெசென்ட்டேஷன், டெக்னிக்கல் குவிஸ், டீபக்கிங், ஈவன்ட்ஸ் மற்றும் கனெக்ஷன் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறன்கள், அறிவு மற்றும் சிந்திக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்த ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 40 க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து சுமார் 850 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்த கருத்தரங்கில் வெற்றியாளர்களுக்கு கல்லூரி இயக்குனர் மற்றும் முதல்வரும் பரிசுகளை வழங்கினார்கள். மேலும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

தினபூமி

# ஏவிசி பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்ப கருத்தரங்கு

ஆடுதுறை, அக். 14-

தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு மயிலாடுதுறை ஏவிசி பொறியியல் கல்லூரியில் நடந்தது.

கல்லூரி துணை முதல்வர் செல்வமுத்துக்குமரன் தலைமை வகித்தார். காரைக்குடி சென்ட்ரல் எலெக்ட்ரோகெமிக்கல் ஆராய்ச்சி நிலைய முதுநிலை முதன்மை விஞ்ஞானி ரகுபதி கருத்தரங்கு கட்டுரையை வெளியிட கல்லூரி இயக்குனர் செந்தில்முருகன், கல்லூரி முதல்வர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இதில் தகவல் தொழில்நுட்பத்துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்த மாணவர்கள் பயன்பெற்றனர்.



மயிலாடுதுறை ஏவிசி கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் காரைக்குடி சென்ட்ரல் எலெக்ட்ரோகெமிக்கல் ஆராய்ச்சி நிலைய முதுநிலை முதன்மை விஞ்ஞானி ரகுபதி கட்டுரையை வெளியிட ஏவிசி பொறியியல் கல்லூரி இயக்குனர் செந்தில் முருகன், முதல்வர் பாலசுப்பிரமணியன், துணை முதல்வர் செல்வமுத்து குமரன் பெற்றுக் கொண்டனர்.

கருத்தரங்கில் இஜிஎஸ் பொறியியல் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகம், விஜடி பொறியியல் கல்லூரி, பிஎஸ்ஜி பொறியியல் கல்லூரி, சாஸ்த்ரா பல்கலைக்கழகம் போன்ற 40 க்கும் அதிகமான கல்லூரிகளில் இருந்து சுமார் 850க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

பொறியியல் நிறுவனங்களின் மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பத்திறமையையும், தங்களது புதுமையான தீர்வுகளையும் வெளிப்படுத்த இந்த கருத்தரங்கு பெரிதும் உதவியது. மேலும் படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப சிறப்பை ஊக்குவிக்கும் தொலைநோக்குடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கருத்தரங்க வெற்றியாளர்களுக்கு பரிசுகள், கலந்து கொண்ட அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது.


# ஏவிசி பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்ப கருத்தரங்கு

ஆடுதுறை, அக். 14-

தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு மயிலாடுதுறை ஏவிசி பொறியியல் கல்லூரியில் நடந்தது.

கல்லூரி துணை முதல்வர் செல்வமுத்துக்குமரன் தலைமை வகித்தார். காரைக்குடி சென்ட்ரல் எலெக்ட்ரோகெமிக்கல் ஆராய்ச்சி நிலைய முதுநிலை முதன்மை விஞ்ஞானி ரகுபதி கருத்தரங்கு கட்டுரையை வெளியிட கல்லூரி இயக்குனர் செந்தில்முருகன், கல்லூரி முதல்வர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இதில் தகவல் தொழில்நுட்பத்துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்த மாணவர்கள் பயன்பெற்றனர்.





மயிலாடுதுறை ஏவிசி கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் காரைக்குடி சென்ட்ரல் எலெக்ட்ரோகெமிக்கல் ஆராய்ச்சி நிலைய முதுநிலை முதன்மை விஞ்ஞானி ரகுபதி கட்டுரையை வெளியிட ஏவிசி பொறியியல் கல்லூரி இயக்குனர் செந்தில் முருகன், முதல்வர் பாலசுப்பிரமணியன், துணை முதல்வர் செல்வமுத்து குமரன் பெற்றுக் கொண்டனர்.

கருத்தரங்கில் இஜிஎஸ் பொறியியல் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகம், விஜடி பொறியியல் கல்லூரி, பிஎஸ்ஜி பொறியியல் கல்லூரி, சாஸ்த்ரா பல்கலைக்கழகம் போன்ற 40 க்கும் அதிகமான கல்லூரிகளில் இருந்து சுமார் 850க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

பொறியியல் நிறுவனங்களின் மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பத்திறமையையும், தங்களது புதுமையான தீர்வுகளையும் வெளிப்படுத்த இந்த கருத்தரங்கு பெரிதும் உதவியது. மேலும் படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப சிறப்பை ஊக்குவிக்கும் தொலைநோக்குடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கருத்தரங்க வெற்றியாளர்களுக்கு பரிசுகள், கலந்து கொண்ட அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது.